**CC.No. 306/2016 (JM.No.II, DHARMAPURI)**

**01.04.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

**PW–1 : திரு. அம்பலதரசி, க/பெ. ரங்கநாதன்**

**<u>முதல் விசாரணை</u>**

நான் முத்தம்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சுமார் 10 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் இரவு 08.00 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரி அங்கு வந்து கண்டாரஓலி, தேவிடியா என்று தகாத வார்த்தைகளால் பேசி, உன்னை ஒழிக்காமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். கல்லால் பின்பக்க தலையின் மீது அடித்ததில் இரத்த காயம் ஏற்பட்டது. என்னுடைய கணவரையும் அதே கல்லால் ஆஜர் எதிரி நெஞ்சின் மீது தாக்கினார். என்னுடைய மகன் ரத்னவேல் என்பவருக்கு போனின் மூலம் தகவல் அளித்து அவர் என்னை தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தார். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலிஸார் என்னை விசாரித்தார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் **<u>அ.த.சா.ஆ.1</u>** ஆக குறியீடுசெய்யப்படுகிறது.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் திருமணம் ஆகி வந்த ஊர் தான் முத்தம்பட்டி என்றால் சரிதான். திருமணம் ஆகி வருவதற்கு முன்பிருந்தே என்னுடைய கணவர் குடும்பத்திற்கும், ஆஜர் எதிரியின் குடும்பத்திற்கும் பிரச்சினை இருந்து வந்தது என்றால் சரிதான். என்னுடைய கணவரின் பெற்றோருக்கும், எதிரியின் பெற்றோருக்கும் தான் அடிக்கடி வாய் சண்டை ஏற்படும் என்றால் சரிதான். இந்த பிரச்சினைக்கு முன்பு ஆஜர் எதிரி என்னிடம் நன்றாக தான் பேசுவார் என்றால் சரிதான். என்னுடைய கணவரின் பெற்றோருக்கும், எதிரியின் பெற்றோருக்கும் தான் அடிக்கடி காவல் நிலையத்தில் நிலம் சம்பந்தமாக புகார் அளிக்கப்படும் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு சென்றால் நிலம் சம்பந்தமான பிரச்சினை என்றும், குற்ற வழக்கு போட முடியாது என்றும், சமாதானம் செய்து அனுப்பி வைப்பர் என்றால் சரிதான். நிலம் சம்பந்தமான சிவில் வழக்கு ஏதும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய மகன் வெளியூரில் 15 வருடங்களாக வேலை செய்து வருகிறார். சாட்சிகள் பசுவராஜ், பெரியண்ணன் ஆகியோரை எனக்கு தெரியாது என்றால் சரிதான். முனியன் கொட்டாயில் என் கணவருடைய உறவினர்கள் உள்ளனர். சம்பவம் நடந்த தேதி எனக்கு குறிப்பிட்டு ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் விட்டில் யாரும் இல்லை என்றால் சரிதான். வீட்டில் யாரும் இல்லாத காரணத்தினால் தான் அடுத்த நாள் மருத்துவமனைக்கு என்னுடைய மகன் வந்து அழைத்து சென்றார். மறுநாள் மருத்துவமனைக்கு சென்று அன்றைய தினமே மாலை வீட்டிற்கு வந்துவிட்டேன் என்றால் சரிதான். மருத்துவமனைக்கு என்னுடைய மகன் தான் அழைத்து சென்றார். இரண்டு நாட்கள் கழித்து தையல் பிரித்தார்கள். சம்பவம் நடந்த போது போலிஸார் வீட்டிற்கு வந்து பார்த்து விசாரணை செய்தனர். மருத்துவமனையில் போலிஸார் வந்து எங்களை பார்க்கவில்லை என்றால் சரிதான். என் கணவரும், என்

மகனும் புகார் அளிக்க சொன்னதால் புகார் அளித்தோம். சம்பவம் நடந்து 2 நாட்கள் கழித்து தான் புகார் அளித்தேன் என்றால் சரிதான். என்னுடைய புகாரில் எதிரிக்கும், எங்களுக்கும் வழித்தட பிரச்சினை உள்ளதாக கூறவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது பொய் என்றாலும், நான் அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல எந்த பிரச்சினை நடக்கவில்லை என்றாலும், புகாரில் நிலம் பிரச்சினை உள்ளதாக போலிஸாரே இடைசொறுகளாக சேர்த்துள்ளார்கள் என்றாலும், அவ்வாறு நடந்திருந்தால் ஊரில் உள்ளவர்களுக்கு அது பற்றி தெரிந்திருக்கும் என்றாலும், உடனடியாக என் மகனுக்கு தகவல் அளித்திருப்பர் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் நடக்கவில்லை என்றாலும், அதனால் தான் போலிஸாரிடம் கணவர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக கூறிவிட்டு தற்போது மகன் அழைத்து சென்றதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மருத்துவமனைக்கு என்னுடைய கணவரும் உடன் வந்தார். மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் சென்றோம். என்னுடைய மகன் தான் என்னை அழைத்து சென்றார். முதல் விசாரணையில் கூறியது போல என் கணவரை அடித்ததாக போலிஸாரிடம் நான் கூறவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வீட்டிற்கும், நிலம் பிரச்சினை உள்ளதாக கூறப்படும் இடத்திற்கும் இடையே 300 அடி தூரம் இருக்கும் என்றால் சரிதான். இரவு நேரம் என்பதால் எங்களுடைய வீட்டின் அருகே வெளிச்சம் இருக்காது என்றால் சரிதான். இயற்கை உபாதைகளை கழிக்க வீட்டிலிருந்து தோட்டத்தின் வழியாக தான் வெளியே செல்ல வேண்டும் என்றால் சரிதான். மேற்படி இயற்கை உபாதைகளை கழிக்க வெளியே செல்லும் போது அடிப்பட்டது என்றாலும், எதிரி எங்களை அடிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் வீட்டில் இல்லாமல் நான் பக்கத்து கொட்டாயில் இருந்தேன் என்றால் சரியல்ல, சம்பவம் நடந்த பிறகு தான் பக்கத்து கொட்டாய்க்கு சென்றேன். நான் சொல்வது போல சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், பக்கத்து கொட்டாயில் நான் இருக்கும் போது எதிரிக்கும், என்னுடைய கணவருக்கும் நடந்த பிரச்சினை பற்றி என்னிடம் சொல்ல தான் எதிரி பக்கத்து கொட்டாய்க்கு தான் வந்தார் என்றால் சரியல்ல. என்னை அடித்ததாக கூறினால் தான் போலிஸார் புகாரை பெறுவர் என்பதற்காக நான் பொய்யாக புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.04.01 17:47:25 +0530

**CC.No. 306/2016 (JM.No.II, DHARMAPURI)**

**01.04.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

**PW–2 : திரு. ரத்தினவேல், த/பெ. ரங்கநாதன்**

**முதல் விசாரணை**

நான் முத்தம்பட்டியில் என்னுடைய அம்மா, அப்பா குடியிருந்து வருகிறார். நான் திருப்பூரில் குடியிருந்து கொண்டு டெக்ஸ்டைலில் வேலை செய்து வருகிறேன். கடந்த 03.03.2016 ம் வருடம் இரவு சுமார் 11.00 மணியளவில் நான் திருப்பூரில் இருந்த போது என்னுடைய அப்பா போனின் மூலம் ராஜாமணி என்பவர் தன்னையும், அம்மாவையும் அடித்ததாக சொன்னார். நான் மறுநாள் காலை என்னுடைய அப்பா, அம்மாவையும் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். அதன் பிறகு 05.03.2016 அன்று காலை 11.00 மணிக்கு மேல் தொப்பூர் போலிஸார் சம்பவயிடத்திற்கு வந்து அக்கம்பக்கம் இருக்கும் வீடுகள் பற்றி விசாரித்து வரைபடம் வரைந்தார். சாட்சியாக இருக்க கேட்டதால் நானும், என்னுடைய அப்பா ரங்கநாதன் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல்கையொப்பம் என்னுடைய தான். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து போலிஸார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

சம்பவம் நடந்தது பற்றியும், சம்பவம் நடந்த இடத்தை பற்றியும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். காவல் துறையினர் காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் கையொப்பம் பெற்றனர். சாட்சி பின்னிட்டு வீட்டின் அருகே படம் வரைந்து கையெழுத்து பெற்றனர் என்று கூறுகிறார். இரண்டு மணி நேரம் போலிஸார் சம்பவயிடத்தில் படம் வரைந்தனர். போலிஸார் 03.00 மணிக்கு வந்து படம் வரைந்ததாக விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நான் சொல்வது பொய் என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தான் நான் கையொப்பமிட்டேன் என்றாலும், போலிஸார் சம்பவயிடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.04.01 17:47:40 +0530